DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 132 / 2023 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 6 |
| Name | திரு. முருகன் |
| Father Name | சுடலைமாடன் |
| Village | கருங்குளம் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 60 |

**( எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 17-11-2025.(நேரம்: )**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது கருங்குளத்தில் குடியிருந்து வருகிறேன்.
2. நான் விவசாய வேலை செய்து வருகிறேன்.
3. அசா 3 மணி என்பவரை எனக்கு தெரியும்.
4. இவ்வழக்கின் எதிரியை எனக்கு தெரியாது.
5. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.
6. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அ.சா 6 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது. அ.சா 6ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 15.10.2021 ஆம் தேதி அருள்மிகு வெயில் உகந்தம்மன் கோவிலில் இரவு பூஜைகள் முடித்து விட்டு நான் கோவில் நடை வாசலை பூட்டி வீட்டிற்கு சென்றேன் என்றும் கடந்த 18.10.2021 ஆம் தேதி இரவு 12.00 மணிக்கு கோவிலில் உள்ள அம்மன் சிலையில் அணிந்திருந்த 6 கிராம் எடையுள்ள தங்க தாலி மற்றும் பணம் சுமார் 500 ரூபாய் திருடுபோனது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவம் கேள்விபட்டேன் என போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சியம் முடிந்த நேரம் 03.15PM**

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 132 / 2023 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 7 |
| Name | திரு. பாலசுப்பிரமணியன் |
| Father Name | அர்ஜுணன் |
| Village | கருங்குளம் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 55 |

**( எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 17-11-2025.(நேரம்: )**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது கருங்குளத்தில் குடியிருந்து வருகிறேன்.
2. நான் விவசாய வேலை செய்து வருகிறேன்.
3. அசா 3 மணி என்பவரை எனக்கு தெரியும்., அவர் அறங்காவலர் தலைவர் ஆவார். அசா 6 முருகன் கோவில் பூசாரி ஆவார்.
4. இவ்வழக்கின் எதிரியை எனக்கு தெரியாது.
5.வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.
6. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அ.சா 7 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது. அ.சா 7ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 15.10.2021 ஆம் தேதி அருள்மிகு வெயில் உகந்தம்மன் கோவிலில் இரவு பூஜைகள் முடித்து விட்டு நான் கோவில் நடை வாசலை பூட்டி வீட்டிற்கு சென்றேன் என்றும் கடந்த 18.10.2021 ஆம் தேதி இரவு 12.00 மணிக்கு கோவிலில் உள்ள அம்மன் சிலையில் அணிந்திருந்த 6 கிராம் எடையுள்ள தங்க தாலி மற்றும் பணம் சுமார் 500 ரூபாய் திருடுபோன விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி சம்பவம் கேள்விபட்டேன் என்றும் மேற்படி சம்பவத்திற்கு எதிரி மீது நடவடிக்கை எடுக்க கேட்டு அசா 3 மணி போலிசாரிடம் புகார்மனு கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சியம் முடிந்த நேரம் 03.18PM**

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 132 / 2023 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 8 |
| Name | திரு. மாரிமுத்து |
| Father Name | குலசை மணி |
| Village | கருங்குளம் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 25 |

**( எதிரி ஆஜரில்லை: எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 17-11-2025.(நேரம்: )**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது கருங்குளத்தில் குடியிருந்து வருகிறேன்.

2. நான் கூலி வேலை செய்து வருகிறேன்.

3. சாட்சி முத்து சுகுமார் என்பவரை எனக்கு தெரியும்.

5. என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள மாரிமுத்துஎன்ற முதலாவது கையெழுத்து என்னுடையது தான்.

6.கடந்த 2021 ஆம் ஆண்டு ஒரு நாள் மதியம் 03.00 மணியளவில் கருங்குளத்தில் உள்ள வெயில் உகந்தம்மன் கோவிலில் வைத்து போலிசார் விசாரித்ததில் நான் கையெழுத்து செய்தேன். அதில் என்ன எழுதியிருக்கும் என்ற விவரம் எனக்கு தெரியாது.

7.வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

8. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(அ.சா 8 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது. அ.சா 8ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 19.10.2021 ஆம் தேதி இரவு 21.30 மணியளவில் நானும், முத்துசுகுமாரும், கருங்குளம் வெயில் உகந்தம்மன் கோவிலில் நின்றுக்கொண்டிருக்கும்போது செய்துங்கநல்லூர் உதவி ஆய்வாளர் அங்கு வந்து எங்கள் முன்னிலையில் வழக்கு சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறத்தையும் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரிதான். அதில் நானும், சாட்சி முத்து சுகுமாரும் கையெழுத்து செய்தோம் என்று சொன்னால் சரிதான். **அந்த பார்வைமகஜர் அசாஆ 5 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**

**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை (நேரம் 03.20PM)**

1. காவல் துறையினர் அந்த இடத்தில் மாதிரி வரைபடம் என்ன காரணத்திற்காக வரைந்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

2.மாதிரி வரைபடம் எதற்காக மற்றும் என்ன காரணத்திற்காக வரையபட்டது என்ற விவரத்தினை என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. நான் கையெழுத்து செய்ததில் என்ன எழுதியிருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**சாட்சியம் முடிந்த நேரம் 03.20PM**

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.